05.09.2018

**அ.வ.எண்.201/2011**

பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் இந்த வழக்கில் 26ம் பிரதிவாதி. என் தகப்பனார் பொன்னுச்சாமியின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். நாச்சிமுத்துக்கவுண்டர் மகன் பொன்னுச்சாமி தான் எனது தகப்பனாருக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிவைத்துள்ளார். இந்த பவர் பத்திரம் தான் எனது தரப்பில் பி.வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொன்னுச்சாமிக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. நான் சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு 05.07.1971ம் தேதிய காங்கயம் சார்பதிவக கிரைய ஆவண எண்.1715/1971 ஆவணத்தைப் பார்த்தேன். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. 05.07.1971 ஆவணப்படி பொன்னுச்சாமி தாவா சொத்தை பொதுவில் கிரையம் பெற்றதாகச் சொன்னால் எனக்குத் தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினை என்பது யார் யாருக்கிடையில் யார் முன்னிலையில் எந்தத் தேதியில் ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.10ல் வாய்மொழி பிரிவினை தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பி.வா.சா.ஆ.10ல் கூறப்பட்டுள்ள சொத்து விபரம் எந்த ஆவணத்தைப் பார்த்து ஏற்படுத்தப்பட்டது என்று எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.10ல் பொன்னுசாமி என் தகப்பனார் லோகநாதனுக்கு வழங்கிய பொது அதிகாரத்தின்படி அந்த பத்திரத்தில் கண்ட சொத்தை லோகநாதன் வீட்டு மனையிடங்களாகப் பிரித்தார். பி.வா.சா.ஆ.10 சொத்து விபரத்தில் கண்டுள்ள வாய்மொழியாக பிரிவினை செய்து என் பெயருக்கு பட்டா பதிவாகியுள்ளது என்பது பொன்னுச்சாமிக்கு ஏற்பட்ட தனிப்பட்டா ஆகும்.

பட்டா நகல் தான் பி.வா.சா.ஆ.13 ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவில் கண்டுள்ள ரீ.ச.93/3ன் பழைய எண்.480 ஆகும். ரீ.ச.93/4ன் பழைய எண்.485 ஆகும். நான் ஒப்புவித்துள்ள பி.வா.சா.ஆ.13ல் கண்டுள்ள நாச்சிமுத்துக்கவுண்டர் மகன் பொன்னுச்சாமி தான் என் தகப்பனாருக்கு பொது அதிகாரம் பத்திரம் தந்த நபர் ஆவார். மேற்படி ஆவணத்தில் பழனிச்சாமிக்கவுண்டர் மகன் பொன்னுச்சாமி மற்றும் பழனிச்சாமிகவுண்டர் மகன் குழந்தசாமி என்பவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் என்றால் சரிதான். அதே ஆவணத்தில்

சின்னப்பகவுண்டர் மகன் ராக்கியப்பகவுண்டர் எனக் கண்டுள்ள 21ம் பிரதிவாதி உலகநாதனின் தகப்பனார் என்றால் எனக்குத் தெரியாது. அம்மணியப்பகவுண்டர் மகன் கோவிந்தசாமிகவுண்டர் என்பவர் இவ்வழக்கில் 15ம் பிரதிவாதியாக உள்ளவர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அதே ஆவணத்தில் கண்டுள்ள செந்தில்குமார், சாந்தி, சண்முகசுந்தரம், மங்கையர்கரசி, சதீஸ்குமார் மற்றும் அசோக்குமார் ஆகியோர்கள் என் தகப்பனாரிடம் கிரையம் பெற்ற நபர்களாவார்கள். பி.வா.சா.ஆ.13ல் எனது பெயர் இல்லை. அதற்கு காரணம் கிரைய பத்திர மதிப்பு நிர்ணயம் பிரச்சனை காரணமாக பெயர் சேர்க்கப்படவில்லை என்று கூறிகிறேன். பி.வா.சாஆ.13 ன்படி வாதிகள் மற்றும் 15,20 மற்றும் 21 பிரதிவாதிகளுக்கு பொதுவில் வழங்கப்பட்டுள்ள பட்டா என்றால் சரிதான். அந்தப் பட்டாவிலேயே கிரையம் பெற்ற நபர்களையும் பொதுவில் காட்டியுள்ளார்கள். நான் சொல்வதைப்போல் பொன்னுச்சாமிகவுண்டர் வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டிருந்தால் பொன்னுச்சாமி தனக்கு பிரிந்த சொத்தை தனி உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற்றிருப்பார் என்றால் சரியல்ல. அதனால் நான் கூறும் வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 மற்றும் 12 வில்லங்க சான்றிதழ்கள் 01.01.1987 முதல் 18.06.2018 வரை உள்ளதாகும். மேற்படி இரண்டு வில்லங்க சான்றிதழ்களும் இந்த வழக்கிற்கு பின்னிட்டு 19.06.2018ல் பெறப்பட்டது ஆகும். மேற்படி இரண்டு வில்லங்க சான்றிதழ்களும் என் தகப்பனார் தான் பெற்றார். நான் கிரயம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் பெற்று பார்க்கவில்லை . நான் எனது அசல் கிரயப்பத்திரம் இன்னும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறவில்லை அதன் நகலை வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.15 நான் முத்திரைத் தீர்வையை செலுத்தக் கோரிய அறிவிப்பு ஆகும். மேற்படி அறிவிப்பு 06.06.2018ல் வந்துள்ளது. நாளது வரை நான் மேற்படி தொகையை செலுத்தவில்லை. என் தகப்பனார் முறைப்படி அனுமதி பெற்று வீட்டு மனையிடங்களாக பிரித்தாரா என்றால் இல்லை. 1971ம் வருடம் பொன்னுச்சாமிகவுண்டர் கிரயம் பெற்ற தேதியிலிருந்து இன்று வரை சொத்துக்கள் எதுவும் பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி கிரயப்பத்திரத்தை பார்க்காமலேயே சொத்தின் நிலைப்பாட்டை தெரிந்து கொள்ளாமல் என் தகப்பனார் என் பெயரில் தனது பொது அதிகாரத்தை பயன்படுத்தி ஒரு நிபமான கிரயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.10 பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள வாய்மொழி பாகப்பிரிவினை என்ற சங்கதி பொய்யானது என்றும், சொத்தை மற்ற பாகஸ்தர்கள் அடைக் கூடாது என்பதற்காக பி.வா.சா.ஆ.10 உருவாகி சொத்துக்களை வேறு நபர்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக தனிப்பட்ட செக்குபந்திகண்டு வீட்டு மனையிடங்களாக நானும் என் தகப்பனார் வகையறாவும் சேர்ந்து கிரயம் பதிவு செய்து வாதிகளை ஏமாற்ற முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ன் படி பிரிக்கப்பட்ட வீட்டு மனையிடங்களில் நாளது வரை எவ்வித கட்டிடங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்படாத பொது சொத்தில் வீட்டு மனையிடங்கள் ஏற்படுத்தி கிரயங்கள் தந்து விட்டு தற்போது வாதிகளுக்கு சொத்தில் பாத்தியம் இல்லை என கூற முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நாளது தேதி வரையில் பொதுவில் தான் அனுபவிக்கப்பட்டு வருவதாகச் சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு அதனடிப்படையில் வருவாய் துறையில் தனி உட்பிரிவு பட்டாக்கள் எதுவும் தரப்பினர்களுக்குள் ஏற்படவில்லை என்றும், வாய்மொழி பாகப்பிரிவினை பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் வாதிகள் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

/ஒம்/ கா.பாரதி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.